4.11.2025 O.S 107/2018 வா.சா1 வள்ளியம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2,4 முதல் 18 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் இல்லத்தரசியாக உள்ளேன். எனக்கு படிப்பறிவு இல்லை. எனக்கு எழுதபடிக்க தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை வழக்கறிஞர் மூலமாக படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரியும். யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால் எனது உறவினர் சொல்லி தெரியும். யார் மூலம் படித்து தெரிந்து கொண்டேன் என்றால் யார் படித்து காட்டினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. வழக்கிற்கு யார் விபரங்களை வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால் 3 முதல் 7 வாதிகள் சொன்னார்கள். அவர்கள் அனைவரும் எனது மகள்கள் ஆவார்கள். எனது மகள்களுக்கு தான் இந்த வழக்கின் முழு விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். பேச்சியம்மாள் என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணமான வா.சா.ஆ1ல் 5ல்1 பாகம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. மீதிமுள்ள 4 பகுதி யாருக்கு பாத்தியம் என்றால் பெருமாள்,முத்து ஆகியோர்களுக்கு பாத்தியம் உண்டு. மற்றவர்கள் யார் என்று தெரியவில்லை. பேச்சியம்மாளும் அவரை சேர்ந்த நபர்களும் பாகம் பிரித்து கொண்டார்களா அல்லது எவ்வாறு அனுபவம் செய்து கொண்டார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும். கல் செக்கு போட்டு அனுபவம் செய்து வந்தார்கள். ஐந்து நபர்களும் பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் மீதமுள்ள 3 நபர்கள் கோவிலுக்கு நன்கொடை கொடுத்தார்களா என்பது பற்றி தெரியவில்லை. இரண்டு பேர் சொத்தை பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த இரண்டு நபர்களின் சொத்து எங்கு உள்ளது

என்றால் கல் செக்கு அமைக்கப்பட்டுள்ளது. அதன் சர்வே எண் தெரியுமா என்றால் அது பற்றி புரியவில்லை. அதன் பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது. 6 செண்ட் இடமாகும். எந்த கிராமம் என்றால் கீழப்பாவூர் ஆகும். பேச்சியம்மாள் என்பவர் எனது மாமியாரின் தாயார் ஆவார். வா.சா.ஆ1 ஆவணத்தின்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கு வடபக்கம் ஆதினசெட்டியார், மாசான செட்டியார் என சொல்லப்பட்டுள்ளது சரியா, தவறா என்றால் சரியானது தான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் வழக்கு சொத்த பொறுத்து வடக்கில் பகவான் என்ற சுப்பிரமணியன், ராமசாமி செட்டியார், சுப்பிரமணியன் செட்டியார் ஆகியோர்கள் இடங்கள் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றும், எந்த நான்கு எல்கை சரியானது என்றால் வீடுகள் உள்ளது. பெயர்கள் தெரியவில்லை. வழக்குரையில் சொல்லியுள்ள வடக்கு எல்கை சரியானது தான். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் தான் சரியானது. வா.சா.ஆ1 ஆவணத்தில் கீழ்பக்க தெரு, ஓடை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் கீழக்கில் கழிவு நீர் ஒடை என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஒடை உள்ளது. அதற்கு அருகில் தெரு உள்ளது. தென்பக்க எல்கையாக சிவனு செட்டியார், கிழமேல் பாதை என உள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. வழக்குரையில் தெற்கில் கிழமேல் பாதை என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பாதை பஞ்சாயத்திற்குள்ளதா, தனியாருக்குள்ள பாதையா என்றால் பஞ்சாயத்திற்குரிய மண் பாதையாகும். அந்த இடத்தில் பஞ்சாயத்து சார்பாக சிமெண்ட் தளம் எதுவும் அமைக்கவில்லை. வா.சா.ஆ1 ஆவணத்தில் மேல்பக்கம் முத்தையா செட்டியார் இடம் என சொல்லப்பட்டுள்ளது அது

பற்றி தெரியவில்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் சர்வே நம்பர் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 1ல் கண்ட சொத்து வழக்கு சொத்து என்பதற்கு வருவாய் ஆவணங்களை பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பேச்சியம்மாளின் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. பேச்சியம்மாளுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உண்டு. அவர்கள் குத்தாலிங்க செட்டியார், பிரமு அம்மாள் ஆவார்கள். குத்தாலிங்கம் எப்போது இறந்தார் என்றால் 50 வருடம் இருக்கும். குத்தாலிங்கத்திற்கு இரண்டு பெண்பிள்ளைகள். அவர்கள் மாரியம்மாள், வசந்தா ஆகியோர்கள் ஆவார்கள். வசந்தா இறந்து விட்டார். மாரியம்மாள் உயிருடன் உள்ளார். வசந்தா இறந்து 25 வருடங்கள் இருக்கும். வசந்தாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் உள்ளார்கள். அவர்கள் ராமகிருஷ்ணன், மற்றும் மாரியம்மாள் ஆவார்கள். வசந்தா குழந்தைகள் இருவரும் உயிருடன் தான் உள்ளார்கள். அந்த இருவரையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த இருவரை பற்றி வழக்கில் சொல்லவில்லை என்றால் தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 ஆவணம் நரசிங்க செட்டியார் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் என்றால் சரிதான். நரசிங்க செட்டியார் எனது தகப்பனார் ஆவார். வா.சா.ஆ 2 ஆவணத்தில் 5 ல்1 பங்கில் பாதி என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள சொத்து யாரிடம் உள்ளது என்றால் என் மாமியாருக்கும் மற்ற நபர்களுக்கும் பாத்தியப்பட்டதாகும். வா.சா.ஆ 2 ஆவணத்தில் கிழமேல் தச்சுமுழம் 20 எனவும், தென்வடல் தச்சுமுழம் 20 எனவும், வா.சா.ஆ 1 ஆவணத்தில் கிழமேல் 22 தச்சுமுழம் என்றும்,

தென்வடல் 25 தச்சுமுழம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. 6 செண்ட் என்பது தான் தெரியும். எந்த அளவுகள் சரியானவை என எனக்கு தெரியவில்லை என்றால் அது பற்றி ஞாபகமில்லை. வா.சா.ஆ 3 ஆவணத்தில் முத்துசெட்டியார், பிரமன செட்டியார், ராமன், பெருமாள், அருணாசலம் ஆகியோர்கள் வாரிசுகள் மொத்தம் 100 பேர் இருப்பார்கள் என்றால் இருக்கலாம். பெருமாள் மற்றும் முத்துசெட்டியாரின் சொத்துக்கள் எங்களுக்கு கிடைத்துள்ளது. மற்றவர்கள் கோவிலுக்கு கொடுத்தார்களா என்பது தெரியவில்லை. இது சம்பந்தமாக எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு மேல்பக்கம் போழியில் ஒற்றைபனையடியான் கோவில் முகப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலின் திருவிழா சமயம் வழக்கு சொத்தில் தான் பந்தல், மைச் செட் வைத்து திருவிழா நடத்துவது வழக்கம் என்றால் சரிதான். இந்த பாரம்பரியம் 100 வருடங்களாக இருக்குமா என்றால் இருக்கும். வழக்கு சொத்திற்கு கீழ் ஒரம் உண்டியல் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் கீழ் ஒரம் சப்பாணி மாடன் உள்ளது என்றால் சரிதான். சப்பாணி மாடன் கட்டி சுமார் 70 முதல் 80 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கலாம். அந்த சப்பாணி மாடனை வைத்து பொதுமக்கள் வழிபடுவது வழக்கம் என்றால் சரிதான். நான் பேச்சியம்மாள் வாரிசு என்பதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண். 2036/29ல் எந்த பக்கம் எனது வழக்கு சொத்து உள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. கோவிலுக்கு முன்னால் சொத்து உள்ளது. புல எண். 2036/29ல் 15 செண்டு இடத்தில் வழக்கு சொத்து போக மீதமுள்ள இடத்தை யார்

வைத்துள்ளார்கள் என்றால் கோவிலுக்கு பாத்தியப்பட்டதாகும். வழக்கு சொத்தில் 3 மரங்கள் இருந்தது. தற்போது எடுத்துவிட்டோம். வழக்கு சொத்தில் உண்டியல் இருப்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆதிஉரிமையாளர்களையும், எனது கொடிவழியில் காண்பிக்கப்பட்ட நபர்கள் அனைவரும் அவசியதரப்பினர்கள் என்பதால் அவர்களை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் தேவையான நபர்களை குறித்து முகவரியுடன் சொல்லப்பட்டும் நான் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து நெடுங்காலமாக கோவிலின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. ஊரில் உள்ள அனைவரும் அந்த கோவிலில் வழிபடுவது வழக்கம் என்றால் சரிதான். என் வழக்கு பொய் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை பற்றி கூறுவதற்கு ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. எவ்வித வருவாய் துறை ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் வா.சா.ஆ 1,2 ஆவணத்தில் பாகம் கோருவது ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.